
# இந்துவே!

## உன்னை அறிந்துகொள்

## HINDU KNOW YOUR SELF



இதழ் 6

5/=

கலியுகாதி - 5102 விக்ரம வருடம் புரட்டாதித் திங்கள் வெளியீடு

தொகுப்பாசிரியர்
கர்மயோகி ஸ்ரீமான் நரசிம்மன் கோபாலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர்களே முன்வாருங்கள்!
## இந்து தர்மத்தைக் காக்க உழைப்போமாக!!

"இந்துவே! உன்னை அறிந்துகொள்" சஞ்சிகையின் வளர்ச்சி தெய்வத்தின் செயல். இதற்கு வாசகர்களின் பேராதரவு இருந்து வருவதும் தெய்வத்தின் செயல்.

எமது செயலில் தூய்மை, நீதி, நேர்மை, தெளிவு, விடாமுயற்சி உள்ளவரை வளர்ச்சி தொடரும் என்பதில் சிறிதளவேனும் ஐயமில்லை.

வாசகர்களே! எமது நாட்டின் மூலை முடுக்கு, பட்டி தொட்டி எங்கும் இந்து தர்மத்தின் பேருண்மைகளை எடுத்துச் செல்ல நீங்கள் முன்வரவேண்டும்.

வாசகர்களே! ஊர்தோறும் வாராந்த அறிநெறிப் பாடசாலைகளை ஆரம்பிக்க வேண்டும். அங்கு இந்து தர்மம் முற்றிலும் இலவசமாகப் போதிக்கப்படல் வேண்டும். இதனை கிரமமாகச் செய்ய தொண்டராசிரியர்கள் முன்வரவேண்டும்.

எமது மக்களின் அறிவுக் கண்ணைத் திறக்க முதற்படியாக அமையக்கூடியது கிரமமாக நடாத்தப்படும் அறநெறிப் பாடசாலைகளே!

# இந்துவாக வாழ்வோம்!
# இந்து தர்மம் காப்போம்!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


T/200/0704.



# மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரிது

## இ/தொலஸ்வலை பாரதி தமிழ் வித்தியாலய ஸ்ரீ விநாயகர் ஆலயம்

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற கூற்றிற்கு இணங்க ஈழத்திரு நாட்டில் இந்துக்கள் செறிந்து வாழும் ஊர்களிலும், ஆலயங்கள் காணப்பட்டாலும், அவற்றில் மலையகப் பகுதிகளில் உள்ள ஆலயங்கள் ஆகம முறைப்படி அமையாமையும், இளைய சமுதாயத்தினரை சிறந்த முறையில் ஆலய வழிபாட்டில் வழிநடாத்தமையும் பெரும் குறைப்பாடாகும். இந்த சந்தர்ப்பத்தில் இளைய சமுதாயத்தினருக்கு கல்வி கூடங்களினூடாக சமய அறிவை வளர்ப்பது மிகவும் அவசியமாகும். இவ் இளைய சமுதாயத்தினரின் சமய அறிவை மேம்படுத்தும் நோக்கில் மலையகத்தில் மாணிக்கபுரியில் உள்ள நிவித்திகலை பிரதேசத்திற்கு அண்மையில் மலைகள் நிறைந்து காணப்படும் தொலஸ்வலையில் இளையோரின் அறிவு கூடமான இ/தொலஸ்வலை பாரதி தமிழ் வித்தியாலயத்தின் அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரும் 1998.04.03ம் திகதி கூடிய ஒன்று கூடலின் போது இவ் வித்தியாலயத்தில் ஸ்ரீ விநாயகர் ஆலயம் ஒன்றினை அமைக்க திட்டமிடப்பட்டதுடன் இவ் ஆலயத்தினை அமைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்க நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது. இதற்கமைய தலைவராக இவ் வித்தியாலயத்தின் தற்போதைய அதிபர். திரு. இருளப்பன் இரவி அவர்கள் தெரிவு செய்யப்பட்டார்.



வருடாபிஷேக அஷ்டோத்திர சங்காபிஷேகம்
1.9.2000

அதனைத் தொடர்ந்து இவ் ஆலயத்தினை அமைப்பதற்கான பணம் வசூலிப்பதற்கு ஆசிரியர்களும், பழைய மாணவர்களும் நிவித்திகலை, இரத்தினபுரி, கஹவத்த, பலாங்கொடை, கொழும்பு போன்ற பகுதிகளுக்கு சென்று அயராது பாடுபட்டு ஒருவாறு தேவையான பணத்தை சேர்த்துக் கொண்டதன் பயனாக பிரதேச வாசிகள், நலன்விரும்பிகள் போன்றவர்களது ஒத்தாசையுடன் 1998.04.10ம் திகதி இரத்தினபுரி சிவன் ஆலயத்தின் குருக்கள் சுந்தரராம சர்மா அவர்களின் தலைமையில் ஜப்னா ஸ்டோர்ஸ் உரிமையாளர் திரு. விவேகானந்தன் அவர்களினால் ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டுவிழா நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து அருட்கலை சக்கரவர்த்தி நவாலியூர் சந்திரன் அவர்களால் ஆலய நிர்மான வேலைகள் நடைபெற்றது. ஆலய நிர்மான வேலைகள் நிறைவு பெறவே மஹா கும்பாபிஷேகம் 11.09.1998 அன்று நடைப்பெற்றது. இதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ சிவாகம சிரோமணி பிரம்ம ஸ்ரீ சிவகுமார் குருக்கள் கலந்துக் கொண்டார். தொடர்ந்து 48 நாள் மண்டலாபிஷேகமும் 29.10.1998 அன்று தேர்த் திருவிழாவும் சிறப்பாக நடைபெற்றமை வரலாற்றில் ஓர் சிறப்பம்சமாகும். இவ் ஆலயத்தின் கும்பாபிஷேக விழாவிற்கு மாணிக்கபுரியில் உள்ள கல்விக் கூடங்களினது, அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள், கல்வி அதிகாரிகள், அண்மித்த பிரதேச வாசிகள் கலந்து சிறப்பித்தனர். அதனைத் தொடர்ந்து இவ் ஆலயத்தில் விநாயகர் சதுர்த்தி தினத்தன்று தேர்த் திருவிழா தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இங்கு நடைபெறும் விழாவில் பால்குட பவனிக்கு பாடசாலைப் பிள்ளைகளும், இப்பகுதியில் உள்ள பொதுமக்களும் கலந்துக் கொள்வது கண் கொள்ளாக் காட்சியாகும். அதுமட்டுமன்றி விழா நாட்களில் இரவில் பாடசாலை மாணவர் களினதும், பழைய மாணவர்களினதும் இந்து தர்ம கலாச்சார நிகழ்ச்சிகளும், சமய அறிவைத் தூண்டும்பல கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

இவ் ஆலய வளர்ச்சிக்கு கொழும்பு கொட்டாஞ்சேனை ஸ்ரீ ஞான வைரவர் ஆலயகுரு ஸ்ரீ சிவாகம சிரோமணி சி. சிவகுமார் குருக்கள் அவர்களின் வழிகாட்டல் முக்கிய காரணம் எனலாம். தொலஸ்வலை வாழ் மக்களுக்கு அருள்மாரி பொழியும் இவ் ஆலயத்தினை விருத்தி செய்ய பல செயற்திட்டங்களை ஆலய பரிபாலன சபை வகுத்துள்ளது.

ௐ ஆலயத்திற்கான மண்டபம் ஒன்றினை அமைத்தல்.

ௐ வரவேற்பு கோபுரம் ஒன்றினை அமைத்தல்.

ௐ அத்தோடு தமிழையும், சமயத்தையும் வளர்த்து கட்டிக்காத்த சமய குரவர்களையும், பெரியார்களையும், நினைவு கூறும் வகையிலும் அவர்களின் வழியை இளைய சமூதாயத்தினர் பின்பற்ற வேண்டும் என்ற நோக்கிலும் சமய குரவர்கள், பெரியார்களின் சிலைகளை பாடசாலை வளவில் நிர்மாணிக்க உத்தேசித்துள்ளோம்.

இவ்வாலயத்திற்கு உதவ விரும்புவோர் ஆலய பரிபாலன சபையுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம். பெரும்பாலும் நகரங்களில் உள்ள ஆலயத்திற்கே அநேகர் உதவி செய்கின்றார்கள். இவ்வாறு பின் தங்கிய பிரதேசத்தில் அதுவும் ஒரு தோட்டப் பாடசாலை ஒன்றில் உள்ள ஆலயத்திற்கு உதவ எவரும் முன் வருவார்களேயானால் அது நிச்சயம் இளைய சமுதாயத்தினரிடையே சமய அறிவையும், தமிழ் கலாச்சாரத்தையும் வளர்க்கப் பெரிதும் உதவும் என்று கூறிக் கொள்கின்றோம்.

## உங்கள் ஆலய வரலாறுகள் வெளியிட வேண்டுமா?

**இலைமறைகாயாக இருக்கும் ஆலயங்களையும் அதன் பணிகளையும் உலகறியச் செய்வதோடு மட்டுமன்றி, மற்றவர்களுக்கும் அது வழிகாட்டியாக அமையும்.**

**எனவே, ஆலய மகோற்சவங்களை முன்னிட்டு சிறப்பிதழ் வெளியிடுவதற்கு எதுவித கட்டணமும் கிடையாது. வழமையான இதழோடு மேலதிகமாக நான்கு பக்கங்களையும் இணைக்கின்றோம். நீங்கள் வெளியீட்டாளர்களுடன் ஒரு மாதத்திற்கு முன்பாகத் தொடர்பு கொண்டு உங்கள் பிரதேச ஆலய மகிமைகளையும் பெருமைகளையும் உலகறியச் செய்யுங்கள்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து திருச்செந்தூர் முருகன் ஆலயம்

## புது - கல்லடி, மட்டக்களப்பு.

# ஆலய வரலாறு

நிலவளமும், நீர்வளமும் நிறைந்த "மீன்பாடும் தேன் நாடு" என்று புகழ் பெற்ற மட்டக்களப்பில், கல்லடியின் கடலோரத்தில் இந்த ஆலயம் அமைந்துள்ளது. இதே கடலோரத்தில் மட்டக்களப்பு தெய்வ நெறிக் கழகத் தலைவர் சுவாமி ஓங்காரானந்த அவர்கள் "சிதானந்த தபோவனம்" அமைத்துள்ளார்கள். இத்தபோவனத்தின் மத்தியில் தான் முருகன் ஆலயமும் கட்டப்பட்டிருக்கிறது.

இவ்விடத்தில் திருச்செந்தூர் முருகனுக்கு கோவில் கட்ட வேண்டி ஏற்பட்டதன் காரணத்தைச் சுவாமி ஜீ கூறுகிறார்:-

"1965ம் ஆண்டு பெப்ரவரி மாதம் மஹா சிவராத்திரி தினத்துக்கு முதல்நாள் இரவு எனது "சிதானந்த ஆச்சிரமத்தில்" படுத்திருந்தேன். அன்றிரவு கனவில் தபோவனம் தோன்றியது. தபோவனத்தில் உள்ளது ஒரே ஒரு பனைமரம் மட்டும்தான். அந்தப் பனைமரத்தடியில் ஓர் காவி உடை தரித்த சுவாமிகள் உட்கார்ந்திருந்தார்கள். நான் அவரை அணுகி இங்கு ஏன் இருக்கிறீர்கள்; எதற்காக இந்த இடத்துக்கு வந்தீர்கள்; இப்போ எங்கு போகிறீர்கள் என்றெல்லாம் கேட்டேன். எனது கேள்விகளையெல்லாம் கேட்டுக் கொண்டே இருந்தார். பின்பு இவர் தளதளத்த குரலில், இனிமையான தொனியில் விடைபகர்ந்தார். கடலை நோக்கிக் கையை நீட்டிக் காட்டி சுவாமி! அதோ தெரிகின்ற திருச்செந்தூரில்தான் நான் இருக்கிறேன். நான் வழக்கமாக இவ்வழியால் கதிர்காமத்துக்குப் போவதுண்டு. அவ்வாறே இப்போதும் கதிர்காமம் போகத்தான் வந்தேன். எக்காலமும் போன்று இன்றும் இந்தப் பனைமரத்தடியில் ஓய்வு பெற்றுக் கொண்டிருக்கிறேன். யாராவது இவ்விடத்தில் ஒரு சிறு கொட்டிலாவது கட்டிவிட்டால் இங்கும் சில நாட்கள் தங்கிப்போகலாம். உனக்கு முடிந்தால் அதைச் செய்து கொடு என்றார்கள். அவ்வளவுதான் நான் கனவு நிலை மாறி, நினைவு நிலைக்கு வந்துவிட்டேன். ஆனாலும், இந்நிகழ்ச்சி எனக்கு நன்றாக நினைவில் இருந்தது. படுக்கையிலிருந்த படியே சிந்திக்கத் தொடங்கிவிட்டேன். எனது தந்தையாரும், இன்னும் சிலரும் பலமுறை சொன்ன ஒரு விடயமும் எனது நினைவுக்கு வந்தது. அதாவது, "முருகன் இரவு கதிர்காமம் போகிறார். மயிலின் தோகை இழுபட ஒளிமயமாகப் போவதை நாங்கள் பார்த்தோம்" என்று கூறியுள்ளனர்.

> 29.08.2000 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு தீர்த்தோற்சவம்.
> 01.09.2000 வயிரவர் பூசை உபயம்.
> *எம்பெருமானின் சித்திரத் தேர் ஆலயத்தில் செய்யப்பட்டு வருகிறது. அடியார்கள் மனமுவந்து பண உதவி செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*
> *— ஆலய பரிபாலனசபை*


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஆகவே! எனக்கு ஓர் உறுதி தோன்றியது. முருகன்தான் இன்று எனக்கும் காட்சியளித்துள்ளார். அன்று சைவ சமயத்தவர்களுக்கெல்லாம் மிகவும் முக்கியமான மஹா சிவராத்திரி தினம். முருகன் வேண்டிக் கொண்டபடி அவ்விடத்தில் ஓர் கோவில் அமைக்க வேண்டும். அதை இன்றே செய்துவிட வேண்டும் என்ற உறுதியும் பூண்டு விட்டேன்.

கோவில் அமைப்பதென்பது நினைத்த உடன் முடிக்கக்கூடிய காரியமா? ஒரு வேல் செய்து வைப்பதென்றாலும் சில நாட்களாகும்; என்ன செய்வதென்று எனக்கே ஒன்றும் தோன்றவில்லை. ஆனாலும், இறுதியில் ஓர் முடிவுக்கு வந்தேன். காலையில் எழுந்து ஆச்சிரமச் சுற்றாடலில் கிடந்த கருங்கற்களில் ஒரு நல்ல கல்லைத் தேர்ந்தெடுத்தேன். உளி, சுத்தியல் முதலிய ஆயுதங்களைக் கொண்டு கல்லைப் புரட்டிப் புரட்டி ஓர் பிள்ளையாருடைய வடிவத்துக்கு உடைத்தேன். வேலை முடிந்ததும், கடைக்குச் சென்று கற்பூரம், ஊதுபத்தி, அபிஷேக சாமான் எல்லாம் வாங்கிக் கொண்டு வந்தேன். பூமரங்களிலிருந்து பூக்களும் பறித்தெடுத்தேன். ஆச்சிரமத்திலிருந்த சீமேந்திலும் ½ பக்கட் அளவு எடுத்தேன். மேசன் கரண்டி, மட்டப்பலகை முதலிய சாமான் களையும் எடுத்தேன்.

*மட்டுநகரில் இருந்து*
**வே. யோகிதாஸ்**

இவைகளை எல்லாம் எனது சைக்கிள் கரியரில் கட்டிக்கொண்டு காலை 9 மணியளவில் தபோவனத் துக்குப் போய்விட்டேன். அது தபோவனத்தின் ஆரம்பகாலம். வேறு யாருமில்லை; ஒரு துண்டுக் கல்லுக்கூட அங்கு கிடையாது; வெறும் மணலாலும் சீமேந்தாலும் கோவில் கட்டமுடியுமா? சிறிது நேரம் நின்று கொண்டே என்ன செய்வதென்று சிந்தித்தேன். ஏதோ ஓர் முடிவு வந்தது. ஒரு பையைக் கையில் எடுத்துக் கொண்டு கடற்கரைக்குச் சென்றேன். அங்கு சிறிது தூரம் சுற்றித் திரிந்து சில சல்லிக்கற்களைப் பையில் எடுத்துப் போட்டுக்கொண்டு வந்தேன்.

இவைகளையெல்லாம் பயன்படுத்தி பனைமரத்தடியில் முருகன் அமர்ந்திருந்த இடத்தில் ஓர் மேடை அமைத்தேன். அதில் நான் கொண்டுவந்த கல்லையும் நிறுவினேன். பார்த்தேன், பனைமரத்தடிப் பிள்ளையார் போன்று அழகாகவே இருந்தது. அபிஷேகம், பூசை, அர்ச்சனை, தீபாராதனை, மந்திர உச்சாடனம் எல்லாம் செய்து முருகனையும் வழிபட்டுவிட்டு வந்து விட்டேன். அன்று முதல் அது ஓர் வழிபாட்டிடமாகவே இருந்து வந்தது.

இது நடந்து சுமார் ஒரு வருட மிருக்கலாம். கவியோகி சுவாமி சுத்தானந்த பாரதியார் மட்டக்களப்புக்கு விஜயம் செய்தார். அப்போது அதே இடத்தில் ஓலைக் கொட்டிலில் கோவிலும் கட்டி, ஓர் வேலும் செய்தெடுத்தோம். பாரதியாருடன், வேலையும் ஊர்வலமாக மேள வாத்தியத்துடனும், கூட்டுப் பிரார்த்தனை யுடனும் கொண்டு வந்தோம். பாரதியார் யாக பூசைகளெல்லாம் செய்து, வேலையும் அந்த இடத்தில் பிரதிஸ்டை செய்தார்கள்.

அன்று முதல் இக்கோவில் "ஈழத்து திருச்செந்தூர் முருகன் ஆலயம்" என்று அழைக்கப்பட்டுவருகிறது. சில ஆண்டு களின் பின்பு இந்தியாவிலிருந்து வருகை தந்த ஒரு சிற்பாசாரியைக் கொண்டு திருச்செந்தூர் முருகனுக்கு ஓர் சிலையும் செய்து பிரதிஸ்டை செய்தோம். அன்று முதல் ஈழத்துச் திருந்செந்தூர் எனப் புகழ் பெற்று திகழ்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்



*அன்புள்ள வேதக்காரர்களே,*

ஓ! "வேதக்காரர்களே" என அழைத்ததற்கு புருவத்தை மேலே உயர்த்தி யோசிக்கின்றீர்களா! உண்மையான வேதத்திற்கு சொந்தக்காரர்கள் இந்து தர்ம மக்களே.

சரி! ஏற்றத்தாழ்வுகளால் மதம்மாறும் வேதக்காரர்களே உங்களுக்கு எளியவனின் ஒரு கடிதம். அதே நேரத்தில் தம்மை உயர் ஜாதி என இறுமாப்புக் கொள்ளும் வேதக்காரர்களுக்கும் அன்பாக கடிந்து எழுதும் கடிதம்.

ஏழை, தாழ்ந்த ஜாதி என புறக்கணிக்கப்படுபவர் சேற்றில் காலை வைத்தால் தான் உயர் ஜாதிக்காரன் சோற்றில் கையை வைக்க முடியும். ஏன் கடவுளுக்கு பிரசாதம் (நைவேத்யம்) பண்ணுவதற்கு ஒரு பிடி அரிசியை எடுக்கின்றீர்களே, அதுக்கூட அந்த ஏழையின் நெற்றி வியர்வை சிந்திய வயலில் இருந்து விழைந்ததுதான்.

கடும் வெய்யிலிலும், முள்ளிலும் கல்லிலும் நடப்பதற்கு சிரமம். அதற்காக பாதணிகள் அணிகின்றோம். அந்த பாதணி செய்து தருபவர்களை உதாசினப் படுத்தினால் நமது கால்களைப் பாதுகாக்க முடியுமா?

எனவே ஜாதி வேற்றுமையைப் பார்த்தால் மனித குலம் ஒருவருக்கொருவர் உதவிகள் செய்து புரிந்துணர்வோடு வாழமுடியாது. இறைவன் மனித குலத்தையே படைத்தார். ஜாதி வேற்றுமையை மனிதனே ஏற்படுத்தினான்.

சீக்கிய இந்துக்களுக்கு புனித நூலான 'குருகிரந்த சாகிபை' மொழிப் பெயர்த்த ஆங்கிலேயர் இடைச் செருகலாக சில பொய்யான வாசகங்களைப் புகுத்தினர். அரபு நாட்டில் ஒருவர் தோன்றி உலகத்தை ரட்சிக்க வருவார் என்று, வேதவியாசர் எழுதிய பதினெட்டு புராணங்களில் ஒன்றான 'பவிஷ்ய புராணத்தில்' தெளிவாக சொல்லப்பட்டிருப்பதாக ஒரு முஸ்லீம் எழுத்தாளர் சரடுவிடுகிறார்.

புராணங்களையும், பகவத்கீதையையும் படித்தவர்களென்றும் படிக்கத் தகுதியுடையவர்களென்றும் சொல்லிக் கொண்டு அலைகின்ற உயர்ஜாதி கூட்டம் இன்றுவரை எம் தர்மத்தை கேவலப்படுத்தும் ஏனைய மதத்தவர்களுக்கு பதில் சொல்ல முன்வரவில்லை.

பதில் சொல்ல விரும்புகின்றவர்களில் பலருக்கு பவிஷ்ய புராணமும் தெரியாது பகவத் கீதையும் தெரியாது.

இந்த நீண்ட கடிதத்தின் உள்நோக்கம் என்னவென்று உங்களுக்கு இப்போது புரிந்திருக்கும்.

நம்முடைய வேதங்களையும் ஆன்மீக நூல்களையும் அர்த்தம் புரிந்து நாம் படிக்கத் தவறிவிட்டால், அவற்றால் நமக்கு நன்மை விளையாமல் போவது மட்டுமன்றி எதிரிகள் நம்முடைய ஆன்மீக நூலை வைத்தே நம்மை அழித்துவிட வாய்ப்பிருக்கின்றது.

ஆக, நான் சொல்ல வருவது என்ன?

வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள், பகவத்கீதை இன்னும் எத்தனை இந்து தர்மத்திற்குரிய நூல்கள் இருக்கின்றனவோ அவை அனைத்தையும் படிக்கவும், அதன்படி நடக்கவும் இந்து தர்ம மக்களுக்கு உரிமை இருக்கிறது.

நாயன்மார்கள் வரலாற்றைப் படித்து பார்ப்பீர்களானால் எல்லா ஜாதிக்காரர் களுக்கும் சிவபெருமான் காட்சி கொடுத்திருக்கும் உண்மை தெரியவரும். வேதங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனால் சொல்லப்பட்டு வேத வியாசரால் தொகுக்கப்பட்டது. அது எப்படி உயர் ஜாதியினருக்கு மட்டும் சொந்தமாகும்?

நம் கையில் புரளும் ரூபா நோட்டுகள் எந்த ஜாதிக்கு சொந்தம்? அதைப் போலத்தான் இறைவனின் உபதேசங்களும்.

நாம் எப்பாடுபட்டேனும் வேதங்களின் சாரமான பகவத் கீதையையோ. சைவ சித்தாந்தத்தையோ படித்துத் தீரவேண்டும். இவற்றின் உண்மை பொருள்புரிந்து படித்துத் தெளிந்தவன், இந்து தர்மத்திலிருக்கும் ஜாதி வேறுபாடு சில சுயநலமிகளால் வயிற்றுப் பிழைப்புக்காக ஏற்படுத்தப் பட்டதென்பதை சர்வ நிச்சயமாக புரிந்து கொள்வான்.

எளியவன் ஒரு பிராமண குடும்பத்தில் பிறந்திருப்பினும் அறியாமையால் (அறிவு பெறுவது தடுக்கப்பட்டு) கட்டுண்டு கிடக்கும் அந்த ஜாதி மக்களை மிகவும் நேசிக்கிறேன். அவர்கள் தெருவை சுத்தம் செய்யாவிட்டால் கிருமிகள் பரவி மனித இனமே அழிந்துவிடும். அவர்களை உதாசினப் படுத்தினால் உயர் ஜாதியினர் எனப் பெருமை பேசும் இனம் அந்தத் தொழிலைச் செய்ய வேண்டி வரும் அல்லது செத்து மடிய வேண்டும். அந்த தொழிலை உயர் ஜாதியினரே செய்தால் அப்போது அவர்கள் எந்த ஜாதி?

இந்து தர்மத்தைப் பலப்படுத்தவும் மதமாற்றத்தை தடுத்து நிறுத்தவும் எமது வேத இதிகாச புராண கருத்துகள் ஜாதி வேற்றுமையின்றி அனைவரையும் சென்றடைய வேண்டும். இதனையே சுவாமி விவேகானந்தர் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

எமது வேதங்களை ஜாதி வேறுபாடுகளைக் கடந்து அனைத்து இந்து தர்ம மக்களிடமும் எடுத்துச் செல்ல வேண்டும். அப்போது தான் எமது இந்து தர்மத்தின் மகத்துவம், உண்மைகளை அறிந்து மக்கள் மதம் மாறாமல் இருப்பார்கள். மதம் மாறுவதற்கு இதுவும் ஒரு காரணம். தாழ்ந்த ஜாதி என ஒதுக்கி வந்தால் எமது ஆலய வளர்ச்சிக்கும், அர்ச்சகர்களின் குடும்ப தேவையை பூர்த்தி செய்வதற்கும் பொருளாதார கஷ்டத்திற்கும் உள்ளாவோம் என்பதனை உயர் ஜாதியினர் சிந்திக்க வேண்டும்.

— நரசிம்மன் கோபாலன்

HINDUSTHAN PUBLICITY BUREAU
NANGAINALLUR
CHENNAI- 600 061

## நாளைய இந்து சிங்கங்கள் இன்றைய மாணவ மணிகள்

*நுண்ணிய நூல் பல கற்பினும், மற்றும் தன்*
*உண்மை அறிவே மிகும். (குறள் - 373)*

அறிவைக் கூர்மையாக்கும் நுட்பமான பல நூல்கள் பலவற்றை நாம் கற்றாலும், முடிவில், நமக்கு இயற்கையாக அமைந்த அறிவே, மேலோங்கி நிற்கும்; சமயத்தில் மழுங்கவும் செய்யும் எல்லாவற்றிற்கும் ஊழே காரணம்.

— சுசீலராஜ், கொ/கணபதி வித்தியாலயம்.

இது உங்கள் இடம் ஏனைய மாணவ மணிகளோடு உங்கள் சமய அறிவையும் பகிர்ந்துகொள்ளுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வேலியே பயிரை மேய்வது வேதனைக்குரியது"

வேத சிவாகம தத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட இந்து தர்மத்தையும் பாரம்பரிய கலாச்சாரத்தையும் பேணிப் பாதுகாப்பதே ஆலய அர்ச்சகர்களின் தலையாய கடமையாகும். ஆனால், இவற்றிற்கு முரணான பாவச் செயல்களைச் செய்து இந்துப் பெருமக்களை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும் காரியத்தை ஒரு ஆலய அர்ச்சகர் செய்தது வேதனைக்குரியது!

இதுவேலியே பயிரை மேய்வது போலாகும்.

நுவரெலியா பிரதேசத்தில் சுமார் அறுபதுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் இணைந்து ஒரு புனிதத் திருநாளில் பஜனைகள் செய்து கதிர்வேலாயுத சுவாமிக்கு விஷேட பூஜைகள் நடாத்த ஏற்பாடு செய்திருந்தார்கள். ஆலய அர்ச்சகரை அணுகி இதற்கான ஏற்பாட்டைச் செய்து உதவுமாறு கேட்டுக் கொண்டனர். அர்ச்சகர் ரூபா ஆயிரம் தருமாறு கேட்டுக் கொண்டார். இளைஞர்களிடம் பொருளாதார வசதியின்மையால் தேவையான பொருட்களை எழுதித் தாருங்கள். நாங்கள் பெற்றுத் தருகிறோம் என்றார்கள். அர்ச்சகரும் ரூபா இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட தொகைக்குப் பெரிய பட்டியலையே தயார் செய்து கொடுத்து விட்டார். இளைஞர்கள் தமது பொருளாதார வசதிக்கேற்ப சகல பொருட்களையும் சிறிது குறைத்து வாங்கி அர்ச்சகரிடம் கொடுத்துள்ளார்கள். அர்ச்சகர் "இந்த பூஜையை செய்ய முடியாது, நான் கொடுத்த பட்டியலில் உள்ளபடி பொருட்களுடன் வந்தால் தான் பூஜை நடக்கும்" என மறுத்துள்ளார். இளைஞர்கள் கெஞ்சிக் கேட்டுக் கொண்டும் அவர் மறுத்துவிட்டார் "சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் தர மாட்டாராம்" இந்த முது மொழிகூட வீண் போகவில்லை.

கடைசியில் என்ன! அர்ச்சகர் அந்த இளைஞர்களை நீடூழி வாழ்க என்பதற்குப் பதிலாக எதிர்ப்பதமுடைய வார்த்தைகளால் (அந்த வார்த்தையை இங்கு பிரசுரிப்பது அநாகரீகமானது) இளைஞர்களை சகஸ்ரநாம அர்ச்சனை செய்துள்ளார். பொறுமை காத்த அந்தப் புனித இளைஞர்கள் ஆலய பரிபாலன சபையிடம் சென்று முறையிட்டுள்ளனர். அவர்கள் தீர விசாரித்து உண்மையை அறிந்து அர்ச்சகரை வெளியேற்றிவிட்டார்கள். ஐந்து கிலோ அரிசியில் பொங்கல் வைத்தால்தான் கடவுள் ஏற்பாரா என்ன?

சாஸ்திரங்களின் கலாச்சார பண்பாட்டினையும் வேத - ஆகம திருமுறைகளின் தத்துவக்கோட்பாடுகளையும் நன்கு உணர்ந்து இந்து தர்ம மக்களிடம் பணிபுரிய வேண்டியவர்கள், "இதனை விடுத்து தம் இஷ்டப்படி மோகம் கொண்டு, சாஸ்திர விதிமுறைகளை உதாசினம் செய்துவிட்டு எவனொருவன் காரியங்களைச் செய்கின்றானோ அவன் தான் முன்னெடுக்கும் அனைத்துக் காரியங்களிலும் தோல்வியே அடைந்து, எல்லோராலும் இகழப்பட்டு அனைத்து சுகங்களையும் இழந்து தரித்திரியனாக அலைவான்" (ய:சாஸ்த்ர விதிம் உத்ஸ்ருஜ்ய, வர்த்த தே காம காரது நஸஸித்திம், அவாப்னோதி நசுகம் ந பாராம் கதிம்!!) என பகவத் கீதையில் கண்ண பரமாத்மா, எடுத்துரைத்துள்ளார். எனவே எல்லாம் எமக்குத் தெரியும் யாரும் அறிவுரை கூறத்தேவையில்லை என்ற ஆணவத்தை விடுத்து "ஐயம் திரிபுர கற்று" தெரிந்தவற்றைச் செய்யுங்கள்! தெரியாவிட்டால் தெரிந்தவர்களிடம் கேட்டறிந்து செய்யுங்கள்!!

இந்து தர்மத்தினை மதிக்கும் மக்களை ஏமாற்றும் நோக்கில் கடவுள் பெயரைச் சொல்லி செய்யும் அர்த்தமற்ற பூஜைகளால் யாதொரு பயனுமில்லை. ஒரு சிலரின் இத்தகைய நடத்தையால் ஏனைய வணக்கத்திற்குரிய பிராமண குழாத்திற்கே களங்கம் ஏற்படுகிறது. தொடர்ந்தும் இது போன்ற ஆக்கங்களை உருவாக்க வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தாமல் இருக்க எல்லாம் வல்ல சோமசுந்தரேசுவரக் கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.

கொழும்பு விஸ்வ ஹிந்து பரிஷத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கடந்த இதழ் தொடர்.....*

# மதமாற்றமும் மனமாற்றமும்

வெ. சு. நடராசா

## நாவலர் காலத்தில்

நாயன்மார் காலத்தில் மதமாற்றம் பற்றிய வரலாற்றை கடந்த இதழில் கண்டோம். இனி நாவலர் காலத்தில் மதமாற்றத்தை ஆராய்வோம். பதினாறாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே நம் நாட்டில் அன்னிய ஆதிக்கங்கள் வேரூன்றத் தொடங்கிவிட்டன. மேலைத் தேச நாகரிகங்கள் – மக்கள் விரும்பா விட்டாலும் – வலுவில் திணிக்கப்பட்டன. வியாபாரத்திற்கென்று வந்தவர்கள் விபரீத முறையில் மக்களிடம் மதத்தைப் பரப்பினர். நம் நாட்டுக் கலை, கலாச்சாரம், மதம், தேசீய உணர்ச்சி ஆகிய அனைத்தையும் அகற்றிவந்தனர். 'உங்கள் பெற்றோர்கள் மூதாதையர்கள் யாவரும் அஞ்ஞானிகள், அறிவீனர்கள், கல்வி அறிவற்றவர்கள், சீர்திருத்தம் சிறிதுமில்லாதவர்கள்; அவர்களை நம்பாதீர்கள்; எம்மை நம்புங்கள்; எமது ரட்சகர் உங்களை ஆசீர்வதிப்பார்.'' என்றே மக்கள் மனதை மயக்கினர். இந்த அன்னியரது அடாத வார்த்தைகளை யெல்லாம் சிலர் நம்பினர். நம்பியது மல்லாது, பணம் கொடுத்து இருக்க இடம் கொடுத்துத் தூபம் போட்டனர் நமது சந்தர்ப்பவாதிகள்.

தானே கனியாத பழத்தைத் தடி கொண்டடித்துக் கனியச் செய்யலாம் அல்லவா? நாட்டு மக்களிடையே அன்னிய மதமும் கொள்கைகளும் வலுவில் திணிக்கப்பட்டதால் நம்மவரும் நம்பினர்; மதியிழந்தனர்; போலிப் பேச்சுக்களை நம்பிச் சுயஉணர்ச்சியைப் பறிகொடுத்தனர். நாட்டிலே ஆங்கிலம் பயிலுவிக்கும் நோக்கமாக கல்விச் சாலைகள் அதிகரித்தன. அக்கால அரசாங்கமும் மறைமுகமாக ஆதரவு அளித்தது.

இக் கல்லூரியிகளினின்றும் வெளியேறிய இளைஞர்கள் சுதேச உடலும் மேல் நாட்டுப் பெயரும் ஆங்கில உள்ளமும் படைத்தவர் ஆயினர். மேல் நாட்டிலிருந்து வந்த எந்த ஒரு கருத்தையும் ஆராயாது கைகொட்டி வரவேற்றனர். நம்மவர் தம்நிலைமை இழந்து, தம்மதம் மறந்து, தேசீயத்தைத் துறக்க முற்பட்டனர். இம்மட்டோடு நில்லாது நம்தேசப் பழக்க வழக்கங்களைப் பரிகாசிக்கவும் தலைப்பட்டனர். மேல் நாட்டுக் கொள்கைகள் நம் நாட்டில் தீவிரமாகப் பரவின. மேல் நாட்டின் மீது மோகம் ஏற ஏறத் தாய் நாட்டுப் பற்றுச் சீர்குழைந்தது. அன்னிய மத குருமார்கள் முன்னிலையில் கைகட்டி, வாய்பொத்தி நின்றனர் நம் மக்கள். தட்டிக் கேட்க ஆள் இல்லாமையினாலே தாம் நினைத்த வாறெல்லாம் மதமாற்றம் செய்தனர். அக்கால அரசாங்கத்துடன் இருந்து கிடைத்த மறைமுக ஆதரவைக் கொண்டு வைத்தியசாலைகள், கல்விக் கழகங்கள் நடத்தினர் வெளிநாட்டோர். கண்டனப் பத்திரிகைகள் வெளியிட்டதுமல்லாது இந்து தர்மத்தின் மீது நிந்தனையாகவும் பல கட்டுரைகள் வரைந்து மக்கள் மத்தியில் பரப்பி வந்தனர். தர்மம் குன்றி அதர்மம் தலைதூக்கி நின்றது. பாமர மக்கள் இப்படியான தீவிர மதப் பிரச் சாரத்துக்கு விரைவில் இரையாகினர்.

*தொடரும்......*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துசமய ஒற்றுமை ஓங்குக!

– சுவாமி மதுரானந்தர் –

உலகிலுள்ள சமயங்களுக்கெல்லாம் தாய்ச் சமயம் இந்து சமயம். உலகம் முழுவதும் சரித்திர காலத்திற்கு முன்பு முதல் இருந்து வருவதும் இந்து சமயமாகும். பல்லாயிரம் ஞானிகள் இச்சமயத்தில் தோன்றினர். ஒன்றாகிய பரம்பொருளை அடைய பல்வேறு வழிமுறைகளையும் அவர்கள் வகுத்துத் தந்தனர். மேல் குறிப்பிட்டவை போன்று பல்வேறு கொள்கைகளும் இந்து சமயத்தில் உள்ளன. ஆனால் இக் கொள்கைகள் அனைத்தினுடையவும் இலட்சியம் ஒன்றே. அனைத்துக் கொள்கைகளும் வழிபாட்டு முறைகளும் ஒரே நூலில் கோர்த்த மணிகள்போல் இந்து சமயத்தின் ஈடில்லா செய்தியை உலகெங்கும் பறைசாற்றுகிறது.



*"ஆறு சமயங்களும் வேறு வேறாகக் கூறும் உனை யாவர் அறிவார்?"*

என்பார் தாயுமானார்.

*"ஒன்றது பேரூர் வழி ஆறதற்குள*
*என்றது போல இருமுச் சமயமும்*
*நன்றிது தீதிது என்றுரை யாளர்கள்*
*குன்று குரைத்தெழு நாயை ஒத்தார்களே"*

என திருமந்திரம்.

*"ஏகம் ஸத் விப்ரா பஹுதா வதந்தி"*

இருக்குவேதம்

(மெய்ப் பொருளாகிய இறை ஒன்று. ஞானிகள் அதனைப் பல பெயரில், பல முறையில் அழைத்து வழிபடுகின்றனர்.)

விஞ்ஞானம் பெருகிவரும் இந்நாளில் இந்து சமயத்தின் அத்வைதக் கொள்கை உலகோரின் பாராட்டைப் பெற்று அனைவரையும் கவர்ந்து விடுகிறது.

"நவந்தரு பேதம் ஏகநாதனே நடிப்பான்" என்பது சைவ சித்தாந்த சாத்திரமாகிய சிவஞான சித்தியார். ஆக வேதாந்த சித்தாந்த சாத்திரங்களெல்லாமே வழிபாட்டு முறைகளை வேறாகச் சொல்லி, வழிபடு கடவுள் ஒன்றே என தெள்ளத் தெளிவாகக் கூறுகின்றன. மேலும் வேதத்தை அடிப்படை அளவை நூலாகக் கொண்டவையே இந்து சமயத்தின் எல்லா உட்பிரிவுகளும் தலைசிறந்த சைவ சித்தாந்த சாத்திரமாகிய திருமந்திரம் கூறுவதைக் கருத்துட் கொள்வோம்:–

*"வேதத்தைவிட்ட அறமில்லை: வேதத்தின்*
*ஓதத்தகும் அறம் எல்லாம் உள; தர்க்க*
*வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற*
*வேதத்தை ஓதியே வீடு பெற்றார்களே".*

இந்து சமய ஒற்றுமை ஓங்குக!



அறிவுக்கு விருந்து இல.4

இந்தப் படத்தில் உள்ள லக்ஷ்மியை என்ன திருநாமம் கொண்டு போற்றுவார்கள்? கண்டுபிடித்து எழுதுங்கள்.

கடந்த இதழ் அறிவுக்கு விருந்துப் போட்டியில் பரிசுக்குரிய அதிஷ்டசாலி ம. மனோரூபி - மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில், முக்கியமாக நான்கு சமயங்கள் நிலவி வருகின்றன. அவையாவன: இந்து சமயம் (சனாதன தர்மம்), முஸ்லிம் மதம், பௌத்த சமயம் மற்றும் இயேசு மதம். இவற்றில் ஒவ்வொரு சமயத்தைச் சார்ந்தவர்களும் கோடிக் கணக்கில் இருக்கிறார்கள். இந்நான்கின் உட்பிரிவுகளாகப் பல மதங்கள் இருக்கின்றன. இந்து தர்மத்தைத் தவிர, மற்ற மூன்று தர்மங்களையும் 'துவக்கி வைத்தவர்' என்று தனித்தனி நபர்கள் இருக்கின்றனர். முஸ்லிம் மதத்தின் துவக்கத்தில், முகம்மது ஸாஹிப்; பௌத்த தர்மத்தின் துவக்கத்தில், கௌதம புத்தர்; கிறிஸ்தவ மதத்தின் துவக்கத்தில், ஏசுபிரான் என்று இப்படி. ஆனால், இந்து தர்மத்தின் துவக்கத்தில், அதைத் துவக்கி வைத்தவர் என்று எவரும் கிடையாது. ஏனென்றால், இந்து தர்மம் என்பது யாரோ ஒரு மனிதரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட தர்மம் அன்று; மாறாக, அனாதிகாலமாக அது இருந்து கொண்டு வந்திருக்கிறது. எப்படி பகவான் சனாதனரோ, அப்படியே இந்து தர்மமும் சனாதனமானது. அதனால் தான், இந்து தர்மத்தை, 'சனாதன தர்மம்' என்றும், தம்முடைய சொரூபம் என்றும் பகவானும் சொல்லிருக்கிறார். (கீதை 14/27) எந்தெந்தக் கால கட்டங்களில் இந்த சனாதன தர்மத்துக்குக் குறைவு ஏற்படுகிறதோ, ஊறு விளைகிறதோ, அந்தந்தக் காலங்களில் பகவான் அவதாரம் செய்து, இதனை நிலை நிறுத்துகிறார். பகவான் இதனை (சனாதன தர்மத்தை) உறுதியாக நிலை நிறுத்துவதற்காக காப்பாற்றுவதற்காகத் தான் அவதாரம் செய்கிறாரே தவிர, இதனைப் புதிதாகத் தொடங்குவதற்காக அன்று என்பதை உணர வேண்டும். பகவான், சனாதன தர்மத்தின் காவலர் என்று, அர்ஜுனனும் சொல்லியிருக்கிறார்– யாயவதத,ர்மகோ,ப்தா' (கீதை 11/18).

## மேன்மைமிக்க

உண்டாக்குதல், கண்டுபிடித்தல் என்று இருவகைகள் உள்ளன. எந்தப் பொருள் முன்பு இல்லையோ, அது உண்டாக்கப்படுகிறது; எந்தப் பொருள் முன்பே இருந்து வருகிறதோ, அது

## அம்பிகை வழிபா

### தேவித் தியானம்

*அம்பா சாம்பவி சந்த்ரமௌலி அபலா அபர்ணா உமா பார்வதீ*
*காளி ஹைமவதீ சிவா த்ரிணயனா காத்யாயனீ பைரவீ*
*ஸாவித்ரீ நவயௌவனா சுபகரீ ஸாம்ராஜ்ய லக்ஷ்மீப்ரதா*
*சத்ரூபீ பரதேவதா பகவதீ ஸ்ரீ ராஜராஜேஸ்வரீ*
*அம்பா நூபுர ரத்ன கங்கணதரீ கேயூர ஹாராவலீ*
*ஜாதீ சம்பக வைஜயந்திலஹரீ க்ரைவேயகை ராஜிதா*
*வீணாவேணு விநோத மண்டிதகரா வீராஸனாஸம்ஸ்திதா*
*சித்ரூபீ பரதேவதா பகவதீ ஸ்ரீ ராஜராஜேஸ்வரீ*

**ஆதிபராசக்தி காயத்ரி**
*தசவதனாயைச வித்மஹே*
*ஜ்வாலமாலாயைச தீமஹி*
*தன்னோ: பராசக்தி ப்ரசோதயாத்*

**துர்கா காயத்ரி**
*காத்யாயனாய வித்மஹே*
*கன்யகுமாரி தீமஹி*
*தன்னோ துர்க்கி: ப்ரசோதயாத்*

**லக்ஷ்மி காயத்ரி**
*மஹா தேவ்யைச வித்மஹே*
*விஷ்ணு பத்ன்யைஸ்ச தீமஹி*
*தன்னோ லக்ஷ்மி ப்ரசோதயாத்*

**சரஸ்வதி காயத்ரி**
*வாக் தேவ்யைச வித்மஹே*
*விரஞ்சி பத்ன்யைஸ்ச தீமஹி*
*தன்னோ வாணி ப்ரசோதயாத்!*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டுபிடிக்கப்படுகிறது. முஸ்லிம், பௌத்தம், கிறிஸ்தவம் ஆகிய மூன்றும் மனிதனுடைய சிந்தனையில் தோன்றியவை. ஆனால், சனாதனமான இந்து தர்மமோ எந்த ஒரு நபரின் மூளையிலிருந்தும் உற்பத்தியாகவில்லை; மாறாக, பற்பல முனிவர்களாலும் கண்டு பிடிக்கப்பட்டதாகும். 'ருஷயோ மந்த்ரத்₃ரஷ்டார:|' அதனால், இந்து தர்மத்துக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தவர் என்று, எந்த ஒரு தனி நபரின் பெயரையும் கூறமுடியாது. இது, ஆரம்பம் இல்லாதது, எல்லையற்றது, நிரந்தரமானது. மற்ற எல்லா தர்மங்களும், ஆன்மிகக் கோட்பாடுகளும் இந்த இந்து தர்மத்திலிருந்தே தோன்றியிருக்கின்றன. ஆதலால், அந்த மதங்களில், மனித நல்வாழ்வுக்கான சாதனங்கள் என்று சொல்லப்பட்டவையும் கூட, இந்து தர்மத்திலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டவை என்றே கொள்ளவேண்டும். எனவே, அந்த மதங்களில் கூறப்பட்டுள்ள சமயச் சடங்குகளையும் நிஷ்காம பாவனையுடன், கடமை என்ற எண்ணத்துடன் செய்து வந்தால், ஆன்மிக மேன்மை ஏற்படும் என்பதில் ஐயம் கொள்ளத் தேவை யில்லை. (ஒவ்வொரு மதத்திலும் குதர்மம், அதர்மம், பரதர்மம் என்று மூவகை உள்ளன. பிறருக்குத் துன்பம் அளித்தல், வஞ்சகம் ஆகியவை குதர்மம்; வேள்வி களில் பசுக்களைப் பலி கொடுப்பது முதலியவை அதர்மம்; தன் வர்ணத்துக்கு விதிக்கப்படாததும், பிற வர்ணத்துக்கு தர்மம் எனவும் உள்ளவை பரதர்மம். குதர்மம், அதர்மம், பரதர்மம் ஆகிய மூன்றினாலும் நன்மை ஏற்படாது. தன்னலமும், செருக்கும் இல்லாமல் தியாக உணர்வுடன், தனக்கும் பிறருக்கும், நிகழ்காலத்திலும், எதிர் காலத்திலும் நலம் பயப்பதுதான் 'தர்மம்' எனப்படுகிறது). உயிர்களின் மேன்மை குறித்து, இந்து தர்மத்தில் எவ்வளவு ஆழமாகச் சிந்திக்கப்பட்டிருக்கிறதோ அந்த அளவுக்குப் பிற மதங்களில் காணப்பட வில்லை. இந்து தர்மத்தின் எல்லாக் கோட்பாடுகளும் அறிவியல் அடிப்படையில் அமைந்தவை; மேன்மை கொடுக்கக் கூடியவை என்பதால், இந்து தர்மம் எல்லாவற்றிலும் மேலானது என்பது

# இந்து தர்மம்;

சுவாமி ராம்ஸுகதாஸ்

# ட்டு மந்திரங்கள்



## மங்கல்ய ஸ்துதி

*ஸர்வ மங்கள மாங்கல்யே சிவே ஸர்வார்த்த ஸாதிகே*
*சரண்யே த்ரயம்பகே தேவி நாராயணி நமஸ்துதே*
*மங்களே மங்களாதாரே மாங்கல்யே மங்களப்ரதே*
*மங்களார்த்தம் மங்களேசி மாங்கல்யம் தேஹிமே பவ*

## தமிழ் மந்திரம்

*கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர் கபடு வராத நட்பும்*
*கன்றாத வளமையும் குன்றாத இளமையும் கழு பிணியிலாத உடலும்*
*சலியாத மனமும் அன்பகலாத மனைவியும் (கணவனும்) தவறாத சந்தானமும்*
*தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும் தடைகள் வாராத கொடையும்*
*தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு துன்பமில்லாத வாழ்வும்*
*துய்ய நின் பாதத்தில் அன்பும் உதவிப்*
*பெரிய தொண்டரோடு கூட்டுகண்டாய்*
*அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே*
*ஆதி கடவூரின் வாழ்வே*
*அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி*
*அருள்வாய் அபிராமியே.*

– *அபிராமி அந்தாதி*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | 2 | |
| 3 | 4 | | | | | ௐ |
| 5 | 6 | | | ௐ | | ௐ |
| | | | ௐ | ௐ | | ௐ |
| ௐ | 7 | | | | | ௐ |
| ௐ | 8 | | | | ௐ | ௐ |
| ௐ | ௐ | 9 | | | | |

## குறுக்கெழுத்துப் போட்டி இல.4

1. யாவரும் தபாலட்டையில் எழுதி அனுப்பலாம்.
2. ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சரியான பதில் எழுதியனுப்பி இருந்தால் குலுக்கல் முறையில் இருவருக்கு பரிசளிக்கப்படும்.
3. ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.
4. விடைகள் கிடைக்கவேண்டிய கடைசித் திகதி ஐப்பசி 20ம் நாள்.

அனுப்ப வேண்டிய முகவரி–
குறுக்கெழுத்துப் போட்டி இல. 4
**HINDU KNOW YOUR SELF**
Kalaakenthram,
48B, Bloemendhal Road, Colombo 13.

இடமிருந்து வலம்
1. இவருக்கு கால் மூன்று. நா ஏழு. முகம் இரண்டு. ஆட்டுக்கடா வாகனம். பாரி சுவாகாதேவி.
3. சந்திரன் தவஞ்செய்து க்ஷயரோகம் நீங்கப் பெற்ற சிவஸ்தலம்.
5. திருதராட்டினன் மந்திரிகளில் ஒருவன். அதர்மமான இராச்சிய, தந்திர உபதேசம் பண்ணுவதிலும் மிக்க வல்லமை உடையவன்.
7. நவக்கிரகங்களுள் ஒன்று.
8. வசுதேவன் பாரி. கிருஷ்ணன் தாய்.
9. கர்ணனை இப்படியும் அழைப்பர்.

மேலிருந்து கீழ்
1. தசரதன் மந்திரிகளில் ஒருவன். பௌத்த சமயத்தைப் பரப்பியவன்.
2. தேவகி நாயகன். கிருஷ்ணன், பலராமன் என்போர்த் தந்தை.
4. கோவலன் – மாதவி மகள். ஒரு தமிழ் நூல்.
6. தர்மன் பாரி – தக்ஷன் மகள்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல - 2 விடைகள்**
இடமிருந்து வலம்
1. அன்னம் 5. கார்த்திகேயன் 8. சகுனி
9. கண்ணகி 10. மாருதி 11. கோபாலன்

மேலிருந்து கீழ்
1. அங்காரகன் 2. யமன் 3. அக்ஷன்
4. கேது 6. கேசவன் 10. கோபாலன்

### பரிசு பெறும் அதிஷ்டசாலிகள்

T. ரமேஷ்குமார் – பதுளை
M. மோகனா – மஸ்கெலியா

### பாராட்டுக்குரியவர்கள்

உ. சஜீவ், ஹட்டன்
சு. சுலோஜினி, கனடா
சு. சுமதி, மலேசியா
எம். சுந்தரராஜா, லிந்துலை
எம். லோகா – மஸ்கெலியா

## விஷக் கிருமிகளின் தாக்கத்திலிருந்து பாதுகாக்க தடுப்பூசி அவசியம்

*சிறிய குழந்தைக்கு போலியோ தடுப்பூசி பெற்றுக் கொடுப்பது பெற்றோர்களின் கடமையாகும். இல்லாவிட்டால் அநியாயமாக அப்பிள்ளையை போலியோ நோய்க்கு பலிகொடுத்து நொண்டியாக்க வேண்டிவரும். இது போன்று இந்து சிறுவர்களுக்கு தேவாரம், பஜனை என்பன பழக்க வேண்டும். இந்து மத தத்துவங்களின் பிரதான அம்சங்கள் தெரிய வேண்டும். இவ்வாறு மேற்கொண்டால் அவர்கள் இந்து தர்ம அடிப்படையின் கொள்கையில் தைரியத்தோடு இருப்பார்கள். இது ஒரு தடுப்பூசி போன்றது. பிறமத தத்துவ தர்க்கங்களால் அவர்கள் அவதிப்பட மாட்டார்கள்.*

- ஞானகோஷம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறம் வளர்த்த அண்ணல் சுவாமி சின்மயானந்தர்

மா முனிவோர் வாழ்ந்த பொன் னாடாகிய பாரதப் புண்ணிய பூமியின் பெருமையினையும், சனாதன தர்மமாகிய இந்து தத்துவங்களைக் கீதைப் பேருரைகள் நிகழ்த்தி அகில உலகத்தின் கவனத்தை ஈர்த்தவர் சுவாமி சின்மயானந்தர்.

பண்டிதரும் பாமரரும் உவந்து கேட்கும் வண்ணம், கீதோபதேசங் களையும், வேத உண்மைகளையும், உபநிடதங்களையும், உலக பொது மொழியான ஆங்கிலத்தில் வெகுசரள மாகவும், இயல்பாகவும் விளக்கியுரைத்து தனக்கென ஒரு இடத்தைத் தேடிக்கொண்டவர் சின்மயானந்தர் சுவாமிகள். ஆன்மீகம் இல்லாத அறிவியல் உலகத்திற்குப் பேரழிவையே தரும் என்ற உண்மையை உலகெங்கும் பறைசாற்றி, அதிலும் குறிப்பாக இளைஞர்களைக் கவரும் வண்ணம் உரை நிகழ்த்தும் அபாரமான நாவன்மை கொண்டவர் சுவாமிகள்.

1951ல் நடந்த, இவரது முதற் சொற்பொழிவு "கேனோபநிஷத்" என்ற உபநிடத நூலின் விளக்கமாகும். அறிவியல் பூர்வமான விளக்கங்களுடன் அமைந்த அந்தச் சொற்பொழிவு இளைஞர்களை வெகுவாகக் கவர்ந்தது இச்சொற்பொழிவு நடந்த இடம் பூனாவில் உள்ள மகா கணபதி ஆலயமாமே. பின்பு படிப்படியாக சுவாமிகளின் சொற்பொழிவு கீதைப் பேருரைகளாக, கீதைஞான யக்ஞமாகப் பிரவாகம் எடுத்து, பாரதத்தின் அனைத்துப் பெருநகரங் களிலும் எதிரொலித்தது உலகளாவிய ரீதியில் பலநாடுகளிலும் இவரது குரல் ஒலித்தது. இவரது கீதைப் பேருரை களைக் கேட்ட வேற்று மதத்தினர், "இந்துக்களின் பைபிளைப் புரிந்து கொண்டோம்" என வியந்து பேசினர்.

கேரள மாநிலத்திலுள்ள எர்ணாக் குளத்தில், 1916ம் ஆண்டு, முன்சிப் வடக்குப்பத்து, குட்டன் மேனனுக்கும், கொச்சித் தலைமை நீதிபதியாக இருந்த பாரிஸ்டர் நீலகண்ட மேனனின் தங்கை மங்கு அம்மாளுக்கும் புத்தம்பள்ளி வீட்டில் புஷ்ய நட்சத்திரத்தில் பிறந்த பாலகிருஷ்ண மேனன் என்ற பெயருடன் வளர்ந்தவர் தான் நம் சுவாமிஜி அவர்கள். இவரது உள்ளத்தில் இறையுணர்வையும் ஆன்மீகச் சிந்தனையையும் ஏற்படுத்தியதில் பெரும் பங்கு உடையவர்கள், குலகுரு சட்டாம்பி சுவாமிகளும், யோகிராஜ் பைரவானந்தாவும் ஆவர்.

இவரது கல்வி எர்ணாகுளம் மகாராஜா கல்லூரியிலும், திருச்சூர் சேயின்ட் தமோஸ் கல்லூரியிலும், பின்பு லக்னோ சட்டக்கல்லூரியிலும் நடந்தது. சிறிது காலம் "நேஷனல் ஹெரால்டு" இதழின் நிருபராகப் பணியாற்றிய போதும் நாட்டுபற்றின் காரணமாக, விடுதலை இயக்கங்களில் ஈடுபட்டுச் சிறைவாசம் அனுபவித்தபோதும் இவரது மனம் நிறைவு கொள்ளவில்லை. எல்லாவற்றையும் துறந்து இறுதியில் ரிஷிகேசத்தில், ஆனந்தக்குடிரில் இருந்து ஆன்மீகப் பேரொளியாக விளங்கிய சுவாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவானந்த சரஸ்வதியை அடைந்தார். 1943ஆம் ஆண்டு மகா சிவராத்திரி அன்று தீட்சை பெற்று சந்நியாசி ஆனார்.

இவரால் நிறுவப்பட்ட சின்மய மிஷன்கள் உலகெங்கும் ஆன்மீகப் பயிற்சி அளிப்பதோடு கல்வி, மற்றும் மருத்துவ சமூகத்தொண்டுகள் ஆற்றி வருகின்றன. இவரது கீதைப் பேருரைகள், "ஹோலிகீதா" போன்ற ஆன்மீக நூல்களாக வெளிவந்துள்ளன.

உலக இந்துக்களை ஒருங்கிணைக்கும் பலமிக்க அமைப்பாக வளர்ந்து வரும் "விஷ்வ ஹிந்து பரிஷத்" அமைப்பை நிறுவுவதில் பெரும் பங்காற்றி அதன் முதலாவது தலைவராகவும் திகழ்ந்தவர் சுவாமி சின்மயானந்தர்.

இவரிடம் உருவானவர்கள்தாம், சுவாமி தயானந்த சரஸ்வதி, சுவாமி தேஜோமயானந்தா மற்றும் இன்னும் பல துறவிகள். உலகெங்கும் இந்து தர்மத்தின் மகத்துவத்தைப் பரப்பி வெற்றியும் கண்டவர் சுவாமி சின்மயானந்தர்.

இலங்கையிலும் சின்மய மிஷனின் கிளை இயங்கி வருவதை நாம் அறிந்திருப்போம். அவர்கள் தற்போது ராம்போதியில் (ரம்பொடயில்) ஆஞ்சனேயர் ஆலயம் அமைத்து வருவதும், பல மருத்துவ சேவைகள் புரிந்து வருவதும் நாம் அறிந்ததே.

சின்மய மிஷன் ஆச்சிரமம் அமைப்பதற்கென வரலாற்றுச் சிறப்பு மிக்க ராம்போதிகை தலத்தை தெரிவு செய்தவர் சுவாமி சின்மயானந்தர் அவர்களே என்பதுவும் குறிப்பிடத் தக்கதாகும்.

*நோய் வருவதற்கு இரண்டு காரணங்கள் இருக்க வேண்டுமென்று நாம் அறிவோம். ஒன்று வெளியிலிருந்து வரும் விஷக்கிருமி; இரண்டாவது நமது உடலின் பலவீனநிலை. எத்தனைக் கிருமிகள் நம்மைத் தாக்கினாலும் உடலில் பலம் இருக்கும் வரை அவை நம்மைப் பாதிப்பதில்லை.* **சுவாமி விவேகானந்தர்**

## *வாசகர் இதயத்திலிருந்து நாலுவரி......*

பெரும் விபத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ள இந்துவே! அபாய சங்கொலி எழுப்புகின்றது. உறக்கத்திலிருந்து விழித்துக் கொள்ளுங்கள்.

**எஸ். சுரேஷ், பதுளை**

முன்னே முளைத்த காதை பின்னே வளர்ந்த கொம்பு மறைத்தது போன்றுள்ளது, நம் சமயத்தின் பெருமையினை பின்னே வந்த மதங்கள் மறைக்கப் பார்க்கின்றன.

**க. சங்கீதா, கொழும்பு.**

சூரியன் உதிப்பதையோ மறைவதையோ எவராலும் தடுக்க முடியாது. இந்த இந்துவே சஞ்சிகையை அழிக்க நினைத்தால் ஆயிரக்கணக்கான இந்துக்கள் அணி திரண்டு கேடயமாக நிற்பார்கள்.

**எஸ். செல்வராஜா, பலாங்கொடை.**

செய்யவும் மாட்டார்கள் செய்ய விடவும் மாட்டார்கள். இந்துவே! வுக்கு தடையாக நிற்பவர்களை நாம் தண்டிக்க வேண்டிய அவசியமில்லை. இறைவனே பார்த்துக் கொள்ளுவார். அண்மையில் நடந்த சம்பவம் இறைவன் உள்ளார் என்பதை நிரூபித்துள்ளது.

**எல். சுப்பிரமணியம், புவக்பிட்டிய.**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சைவ மக்கள் மதமாற்றப்படுதற்குரியர் அல்லர்

- இலக்கிய கலாநிதி பண்டிதமணி மு. கந்தையா -
ஏழாலை.

மனிதன் ஒவ்வொருவனுக்கும் அவனவன் பிறப்பு வழியால் அமைந்த மதமே உண்மை மதம். அந்த மதத்தில் அவன் நிலைத்திருப்பது அவன் பிறப்புரிமை புறநிலைக் கவர்ச்சிகளால் அவனை மயக்கி மற்றொரு மதத்திற் கிழுப்பது அப்பட்டமான மனித உரிமை மீறலாகும்.

'ஏழைக்கு உண்ண உடுக்கக் கொடுத்தோம். அதற்குப் பிரதியீடாக அவனை நம்மதத்திற்கு மாற்றும் உரிமை நமக்குண்டு' என்று அகங்கரிப்பது சுத்த அதர்மமாகி உணவுடை நல்கிய தர்மப் பயன்களையும் அடித்தழித்துவிடும் ஆபத்துக்கிடமாகும். அதை உணராது, தாமாக அவனை மாற்றியெடுக்குந் தந்திரத்திரத்துக்கு அவனாக விரும்பி மனம்மாறி வந்ததாகச் சாயம் பூசுவதும், அந்த லட்சணத்தில் அவன் மதம் மாற்றப் படுதலைத் தடுப்பதற்கு எந்த நபருக்கும், எந்த ஸ்தாபனத்துக்கும், எந்த அரசுக்குந்தான் உரிமையில்லை எனக் கொக்கரிப்பதும் உண்மைக்கு உலை வைக்குந் தந்திரமன்றி வேறில்லை.

வணக்கத்துக்குரிய பாப் பாண்டவர் வாய்மொழியாக அவ்வகையில் ஒன்று வெளிவந்ததாக 8.11.99 வீரகேசரி யிலும், 9.11.99 'டெயிலி நியூஸ்' ஆங்கில இதழிலும் பிரசுரமாயுள்ள செய்திகளை மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் அலசிச் சைவ ஞான நோக்கில் சைவர்க்கு அதன் பொருந் தாமையைப் பிரகடனம் பண்ணி வைக்க வேண்டிய தார்மீகக் கடனுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன சைவ ஸ்தாப னங்கள் அனைத்தும், ஏன்? தனிப்பட்ட சைவ அறிஞர் அபிமானிகளும் கூட,

சமயம் சார்பான சாமானிய இலட்சணத்துக்கு வெகுதூரம் வேறுபட்ட இலட்சணப் பின்னணியோடு கூடியது சைவம். சைவம் என்ற பெயர்க்காரணமும் சைவமக்கள் சிவனையே – அவன் ஒருவனையே – பரம்பொருளாகக் கொண்டு வழிபட வேண்டியவர்கள் என்ற நியாயமும், சைவத்துக்குச் சிறப்புமிக்க ஆதார நூல்களாக ஆன்றோரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் சைவத் திருமுறைகளாலும் சைவசித்தாந்த சாஸ்திரங்களாலும் வலியுறுத்தப் பட்டுள்ளன. இவற்றை விடச் சிறந்தன என்றெண்ணி விரல்மடித்தற்குச் சைவப் பரப்பில் எந்தவொரு நூலுமில்லை. ஆதலின் இந்நூல்களின் துணிவே துணிபாம்.

சைவ சித்தாந்த சாஸ்திரங்கள் விளக்கும் முப்பொருட் கோட்பாட்டில் சிவனே தன்னியல்பால் தானறியும் சித்துப் பொருள். உயிர் தன்னுடனா யிருக்குஞ் சிவன் அறிவித்தலால் மட்டும் அறியத்தகும் சித்துப் பொருள் அன்றியும், சிவன் தன்னியல்பால் தானுளதாகும். சத்து உயிர் சிவனிருப்பால் தான் உளமதாகுஞ் சத்து, அத்துடன் இயல்பாகவே தன்னியல் பால் அனைத்தையும் வியாபித்திருக்கும் வியாபகப் பொருள் சிவம். அதன் அகண்ட வியாபகத்துள் எங்கோ ஒரு சிறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதியில் அமையும் ஏகதேச வியாபகப் பொருள் உயிர். மேலும், சர்வ பாவங்களினாலும் குறைபாடுடையதான உயிரின் குறைபாடு களைப் போக்கி அதைத் தன்போல் நிறைவுள்ள தொன்றாக்குங் காருண்யச் செயலிலே கண்ணாக இருந்து வருகிறான். சிவனின் இக்காருண்ய கைங் காரியத்துக்குத் தொடக்கமுமில்லை; முடிவுமில்லை. இக்கைங்கரியத்தின் பொருட்டுச் சிவன் தன்போல் அநாதியாகிய உயிர் என்றுண்டோ அன்றே அதனுட் புகுந்து இரண்டற்ற ஒரு நிலையில் இயைந்திருந்து கொண்டிருக் கின்றான். அந்த இயைபு ஸ்திரமானது. சிவனே துடைத்துத் தள்ளினாலும் உயிர் அதனை அகன்று போய்விடா வண்ணம் ஒட்டியிருக்கும் இயைபு அது. இவ்வகையிற் சீவனுக்குச் சிவத்துடன் உள்ளதாய இயைபு இயல்பானது. இவ்வியைபின் பெயரே சைவம்.

இருந்தும், இந்த இயைபைச் சரியாகவும், பூரணமாகவும் தன்னறிவிற் கொண்டிருத்தற்குப் பாதகமான மலச் சேர்க்கையோடு இயல்பாகவே இயைந்துள்ளது உயிர். அந்நிலையிலும் மலமறைப்பாகிய அந்த வீக்கத்தைச் சற்றே விலக்கிக் கொடுக்கும் உபகாரியாகச் சிவனருள் அவ்வுயிர்க்கு ஒரோரளவு உதவிக் கொண்டிருத்தல் தப்பாது. அவ்விதம் அதனுதவியால் வாய்க்கும் வெளிப்பு உயிருக்குயிர் வெவ்வேறு தரத்தாயிருக்கும். அது இயல்பான சிவன் சீவன் தொடர்பின் அந்தரங்கநிலையாகும். இவ்வாறான இவ்வந்தரங்க நிலையில் உயிர்கள் தத்தமளவிற் பெறக்கூடும் சிவ சீவ இயைபுநிலை விளக்கத்திற் கூடுதலான விளக்கநிலை பெற்ற உயிர்களே சைவ சமயத்தில் வந்து பிறக்கின்றன என்பது சித்தாந்த சாஸ்திரத் துணிபு. இத்துணிபை உறுதிப் படுத்தும் அப்பர் சுவாமிகள் தேவாரம் ஒன்று 'சைவமாம் சமயம் சாரும் ஊழ் பெறல் அரிது' என விமர்சித்திருத்தல் இங்கு கருதத்தகும்.

இத்தொடர்பில், சைவத்தில் வாரா ஏனை உயிர்களின் நிலை என்னாகும் என்ற விகாரமும் இன்றியமையாததே. சுருங்கச் சொல்லில், அவைகளின் விளக்க நிலையின் தர வேறுபாட்டைப் பொறுத்து அவ்வற்றின் அவ்வப் போதைய தேவைப் பூர்த்திக்காக, சிவனாணையின் படி உருத்துவரும் ஒவ்வோர் சமயத் தலைவர் முகாமையிலுள்ள சமயங்களில் வெவ்வேறாக விடப்பட்டுப் படிமுறைக் கிரமத்திற் சமயம் மாறிச் சமயமேறி முடிவில் பூரண விளக்கமுறும் நிலைக்குரிய சமயத்துக்குக் கொண்டு வரப்படும் என்பது சைவசித்தாந்தத்தின் தீர்க்கமான முடிவாகும்.

இவ் விளக்கத்தின் பிரகாரம் சைவத்திற் பிறக்கும் உயிர் இயல்பிலேயே சிவ சீவ இயைபு விளக்கத் தகுதி பெற்ற சைவனாகவே பிறக்கிறது. மேல் அதற்கு ஆகவுள்ளது என்னெனில், மேலும் தன்னைத் தொடர்ந்து விடாதிருக்கும் மல மயக்கத்தின் பாதிப்பை விலக்குதற்குரிய சமய தீக்ஷை பெற்று, குறித்த சிவ சீவ இயைபையே தியான பாவனைகளோடு கூடிய செயற்பாட்டினால் அப்பியாசித்து வரப் பண்ணுதலை உள் நோக்காகக் கொண்ட சைவ நித்திய அனுஷ்டான த்தாலும் அதே நோக்கிலமையும் சரியை, கிரியை, யோக அனுஷ்டானங்களாலும் வாய்க்கும் குருவருளால் மெய்ஞ்ஞானம் பெற்றுத் தன் வாழ்விலட்சிய மாய முத்தியின்பம் பெறுதலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கப் பிழையாக இது சைவத்திற் பிரவேசிக்க வைக்குந் தீக்ஷை என எடுத்துக் கொண்டு பிறக்கும் போது ஒருவருக்கும் ஒரு சமயமுமில்லை; தீக்ஷை பெற்ற பிறகு தானே சமயம். ஆதலாற் சைவத்திற் பிறந்தவரென்றாலும், ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டு அதற்குரிய சமயத்திற் சேர்வதில் பழுதொன்றுமில்லை எனக்கூறி மதமாற்றப் பரம்பலுக்கு ஊதிக் கொடுப்பாரையுமுடையது இவ்வுலகம். அதுபற்றி விழிப்பாயிருக்க வேண்டியது, சைவர் கடன்.

இவ்விசாரணையின் முடிவாக அறியக்கிடப்பதாவது: சைவத்தில் அதாவது சைவப் பெற்றாரிடத்திற் பிறக்கும் ஒரு பிள்ளை சைவனாகவே பிறக்கிறது. பிறந்து பிறப்பு லட்சியத்தை நோக்கி முன்னேற வாயிலாகச் சிவ தீக்ஷை பெற்றுச் சரியை, கிரியை, யோக நெறிவழி முன்னேறுதற்கு அநுகூலமான வழி துறைகளில் முன்னேறும் அரும் பெரும் வாய்ப்புள்ளதாயிருக்கிறது. அதற்கான சாதன சாத்திய விளக்கங்களைத் தாராளமாக வழங்கும் உத்தர வாதமுள்ள சாஸ்திர தோத்திர நூல்களும் அவற்றை அருளிச் செய்தவர்களும் பிறப்பின் முடிவான இலட்சியப்பேற்றைப் பெற்றவர்களென அநுபவ பரம்பரையில் வைத்து நம்பகமாக அறியப் பெற்றவர்களுமான சைவ சமய குரவர்கள், சந்தான குரவர்கள் வரலாறுகளும் அத்தாட்சி பூர்வமாக இருந்தே ஆகின்றன. ஆகவே தன்னிலையில் மேல் மேல் உயரும் அதிர்ஷ்டப் பேறுள்ள ஒரு சைவன் அதற்கிடமுண்மை எவ்வாற்றாலும் நிரூபிக்கப்படாதிருக்கும் ஞானஸ்நான நெறிக்கு மாற்றப்படுதல் சர்வப் பிரயத்தனங்களாலுந் தடுக்கப்பட வேண்டியதாம் என்க.

*நன்றி: இந்து சாதனம்*

# அன்பு வஞ்ச பூஜையா?

அன்பிற்கு இனிய இந்து சகோதரா!

நமது ஊர்க் கோவில்களில் பல விதமான பூஜைகள் நடைபெறுகின்றன. தேங்காய், பழ பூஜைகள், பாயசம், பலகாரம் படைத்து பூஜை செய்வது, பால், நெய், தேன் அபிஷேக பூஜை செய்வது, இப்படி பலவிதமான பூஜைகள் தினமும் நடைபெறுகின்றன. இப்பூஜை செய்பவர்களைக் கேட்கும்போது, "இப்பூஜையை நேர்த்தி கடனுக்காக செய்கிறேன், ஒரு காரிய பலனுக்காக செய்கிறேன், கஷ்டங்கள் நீங்க பூஜை செய்கிறேன்", இப்படி ஒரு வேண்டுதலுக்காக வேண்டி இப்பூஜை செய்கிறேன்" அநேகர் சொல்கிறார்கள்.

"நான் குறித்த காரியத்தில் வெற்றி பெற்றால் 101 தேங்காய் உடைக்கிறேன்" என்று ஒருவர் கூறுகிறார். "எனக்கு வேலை கிடைத்தால் வெண்பொங்கல் வைத்து பூஜை செய்கிறேன்" என்று இன்னொருவர் கூறுகிறார். "என் வாழைத் தோட்டத்தில் வாழை மரம் நல்ல பலனைத் தந்தால் இரண்டு வாழைத் தாரை வைத்து பூஜை செய்கிறேன்" என்று இன்னுமொருவர் சொல்கிறார். "இந்த இடத்தை நான் வாங்கினால் கடவுளே உனக்கு பாலபிஷேகம் செய்வேன் என்று மற்றொருவர் கூறுகிறார். "குழந்தை சுகமாகப் பிறந்தால் சர்க்கரைப் பொங்கல் போடுவேன்" என்று பிறிதொருவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுகிறார். இப்படி ஏதாவது ஒரு காரணத்துக்கு கடவுளுக்கு பூஜை செய்யும் வழக்கம் நம்நாட்டில் பெருகி விட்டது. இதனால் இப்பூஜையைப் பற்றி நாம் சற்று ஆழ்ந்து சிந்திப்பது அவசியம்.

பூஜை என்றால் கடவுளுக்குச் செய்யும் அன்பு (பக்தி) உபசாரம் ஆகும். கடவுள், நோயாளி, கர்ப்பிணிப் பெண், சிறு குழந்தை இருக்கும் இடங்களுக்கு வெறும் கையோடு போகக்கூடாது என்று பெரியோர்கள் சொல்வார்கள். காரணம், அன்பு உபசாரம் செய்யும்போது ஏதாவது ஒரு பொருளைக் கொடுத்து உபசாரம் செய்ய வேண்டும். கடவுளுக்கு அன்பு உபசாரம் செய்வதைப் பற்றி கீதையில் பகவான் கூறுகிறார். பகவத்கீதை 9ஆவது அத்தியாயம், 26ஆவது சுலோகத்தில் "எவன் எனக்குப் பக்தியுடன் பச்சிலையோ, புஷ்பமோ, பழமோ, தீர்த்தமோ அர்ப்பணிக்கின்றானோ பக்தியுடனும், தூய்மையுடனும் சமர்ப்பிக்கப்பட்ட அப்பொருளை நான் புசிக்கிறேன்" என்று கூறுகிறார்.

பக்தி, அன்பு, காதல் என்பன ஒரே பொருளைக் குறிக்கும் பல வார்த்தைகள் ஆகும். எனவே அன்பு(பக்தி) இல்லாத பூஜை பலன் தராது என்பதாகும். எனவே ஒரு வேண்டுதலுக்காக அல்லது ஒரு காரிய நிவர்த்திக்காக செய்யும் பூஜை வியாபார பூஜை ஆகும். அன்பு(பக்தி)டன் செய்யும் பூஜையே உண்மை பூஜை ஆகும்.

நமது நாட்டில் அரசில்வாதிகளுக்கும், அரசு அதிகாரிகளுக்கும் லஞ்சம் (நன்கொடை) கொடுத்தால் நினைத்த காரியங்களைச் சாதிக்க முடியும். அதுபோல் நம் கோவிலில் கொடை கொடுத்தால் நினைத்த காரியம் சாதிக்க முடியாது. காரணம் மனிதனுக்கு உலகப் பொருட்களைக் கொடுத்தால் ஏமாந்து விடுவான். அதுபோல் கடவுளுக்கு உலகப்பொருட்களைக் கொடுத்து ஏமாற்ற முடியவே முடியாது. கடவுளுக்கு உலகப் பொருட்கள் எதுவுமே அவசியம் இல்லை; காரணம், இந்த உலகத்தைப் படைத்தது கடவுள். இந்த உலக உயிர்களைப் படைத்ததும் கடவுள். இந்த உலக பொருட்கள் அனைத்தையுமே படைத்ததும் கடவுள். எல்லாவற்றையும் படைத்த கடவுளுக்கு பல பொருட்களைத் தருகிறேன் என்று மனிதர்கள் சொல்வது தென்னை மரத்துக்கு ஒரு தேங்காய் கொடுப்பது போல் ஆகும்.

அன்பை(பக்தி) வளர்ப்பதற்கே கடவுளுக்கு பூஜை செய்கிறோம் என்பதை மக்கள் மறந்துவிட்டார்கள். ஆடம்பர பூஜையாலோ அல்லது உயிர்பலி பூஜையாலோ பக்தியை வளர்க்க முடியாது. அகங்காரம் வளர்ந்து கொண்டேபோகும். எனவே கடவுளுக்கு வியாபார ரீதியான லஞ்சபூஜை செய்வதை விட்டுவிட்டு அன்பு ரீதியான பக்திபூஜை செய்வோம். "அன்போடு உருகி அகங்குழைவார்க் கன்றி என்பொன் மணியினை எய்த ஒண்ணாதே" என்பது திருமூலரின் திருமந்திர வாக்கு. எனவே கோவிலுக்குச் சென்று அன்போடு உருகி கடவுளுக்குப் பூஜை செய்வோம், கோவிலில் கூடும் பக்தர்களோடு அன்பைப் பகிர்ந்து கொள்ள பொங்கல் இனிப்புப் பிரசாதங்களை வினியோகம் செய்வோம் என்று அன்போடு அனைத்து இந்துக்களையும் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி:– வேதமுரசு

*செய்தக்க அல்ல செயக் கெடும்; செய்தக்க*
*செய்யாமை யானும் கெடும்.* –குறள் – 466

தலைகள் நிமிரட்டும்! கைகள் உயரட்டும்!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த இதழ் தொடர்ச்சி.....

# இந்து தர்மத்திற்கு அபாயம்

## 'நான் இந்துவல்ல' என்னும் போக்கு

கடந்த இதழில் கூறியபடி பலமுனைத் தாக்குதலைச் சமாளிக்கத் தைரியம் இல்லாதவர்கள்; உடனடியாகத் தம்மை மட்டும் பிரித்துக் கொள்வதில் ஈடுபடு கிறார்கள். உதாரணமாக சைவமே பழமையானது என்றும் அல்லது வைணவம் மட்டுமே புதிய சிந்தனை யாளர்களுக்கு உகந்த அம்சங் களையுடையது என்றும் பேசத் தொடங்கி விடுகிறார்கள். ஒரு இந்துவுக்கு வேண்டியது துணிச்சல். உங்களிடம் சாதிப்பாகுபாடு உண்டு என்று சொன்னதும் பதுங்குகிற கோழைத் தனமல்ல. ஆமாம்! அது பழங்கதை. அதைக்களைய உறுதி பூண்டிருக்கிறேன் என்று சொல்ல பக்குவம் வேண்டும். ஏதோ ஒரு வகையில் அடிமைச் சரித்திரம் இல்லாத நாடே உலகில் இல்லை. அதைத் திருத்துவது தான் கடமையே அன்றி, அதற்காக நமது ஈடு இணையற்ற பாரம்பரியத்தையே தூக்கி எறிய நினைப்பது, சுய சிந்தனை உள்ளவர்கள் செய்கிற காரியம் அல்ல.

இந்து தர்மத்தின் மீது அக்கறையும் பற்றும் கொண்ட பாரதியும், விவேகானந்தரும், காந்தியும் சொல்லாதவை எதையும் இவர்கள் சொல்லிவிடவில்லை. நம்மைத் திருத்திக் கொள்ளுதல் முக்கியமே தவிர, நான் இந்துவல்ல என்று சொல்லிக்கொள்வதால், பிரித்துப் பேசுவதால் இருவருக்கும் இழப்புத்தான். இதனால் இலாபம் யாருக்கு என்பதை விளக்க வேண்டிய அவசியம் இல்லை. இதில் வியப்பு என்னவென்றால். மதம் மாற்றி அழைத்துச் சென்றவர்கள்கூட ஏழைகளை தாழ்த்தியே வைத் திருப்பதும், அவர்களை வித்தியாசமாக நடத்துவதும் தான். இதில் இருந்து அவர்கள் வேண்டுவது எண்ணிக்கையும், வெளி நாட்டுப் பணமும் அன்றி சமத்துவம் இல்லை என்பது தெளிவாகிறது அல்லவா?

## சாதிவாரிச் சங்கங்களின் நிலை

ஒரு சமுதாயத்தின் குறை அல்லது நிறைகளுக்கு குறிப்பிட்ட சாராரை மட்டும் பொறுப்பாக்குவது போன்றொரு பாவனையும் இப்போது உருவாகிறது. இந்து தர்மம் போன்ற புராதனமும், மேன்மையும் கொண்ட சமயத்திற்கு சமூகத்தின் எல்லா அங்கத்தினர்களும் சிறப்பான பங்கை ஒன்றாகவே அளித்து வந்துள்ளனர். ஆனால் இந்து தர்மம் தாக்கப்பட்டவுடன் பிரதேசவாரியாகப் பிரிந்து, தற்காத்துக் கொள்வது இழி செயல். இனியேனும் வேறுபாடுகளை மறப்போம். இந்துக்களாக இணைவோம். இதற்கு நம்முடைய அனைத்துச் செல்வங்களையும் திரட்டிப் பணி செய்ய வேண்டும். ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண் டாட்டம் வந்து விடக்கூடாதல்லவா?

## முற்போக்குச் சிந்தனையாளர் எனும் பட்டம்

முற்போக்கு என்பது கம்யூனிசம் என்பதன் புனைப் பெயர். கிறிஸ்தவ நாடான அமெரிக்கா, இவர்களை விஷம்போல வெறுக்கிறது. இஸ்லாமிய நாடுகளில் இவர்களால் மூச்சுக்கூட விடமுடியாது. எல்லாத் தத்துவங் களையும் உள்வாங்கி அவற்றின் நல்லம்சத்தை ஏற்கும் இந்துக்கள் தேசங்களில் இவர்கள் தளைத்ததோடு மட்டுமல்லாமல், இன்று தாம் கூடுகட்டியிருக்கும் மரத்தின் கிளையையே, மரத்தின் அடிவேரையே வெட்ட முயல்கிறார்கள். கிறிஸ்தவ, இஸ்லாமிய நாடுகள் பிற தத்துவங்களைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுக்காதவையும் மதிக்காதவையும் ஆகும்.

ஏதோ ஒரு அபூர்வப் பிறவியினாலே முற்போக்கு என்றால் இந்து தர்ம எதிர்ப்பு என்பதாக பொருள் கொணர்ந்து விட்டார்கள். மார்க்ஸிஸ்டுகளின் 'மத எதிர்ப்பு' (மதம் ஒரு அபின்) புரிந்து கொள்ளக்கூடியதே. ஆனால் இந்து தர்மத்தை மட்டும் எதிர்ப்பது ஒரு புதிய அரசியல் கோணாங்கித்தனமே தவிர வேறென்ன? மனித சமுதாயம் கண்ட விழுமியக் கலை, கலாச்சார, ஆன்மிக, பண்பாட்டு, இலக்கிய மரபுகளை அழிப்பதற்கு அறிவு ஜீவிகளாக தம்மைக் கருதிக் கொள்ளும் இவர்கள், துணை போவது வியப்புத்தான்.

முற்போக்குவாதிகள் என்று கூறியபடி ஏனைய மதத்தவரின் புகழ்ச்சிகளுக்கும் பரிசில்களுக்கும் ஆசைப்பட்டு அவர்களால் இந்து தர்மத்திற்கு இழைக்கப்படும் அநீதிகளைக் கண்டும் காணாது விடுபவர்கள் எம்மத்தியில் நிறையவே உள்ளனர். இத்தகையவர்கள் சமரசம் என்ற பெயரில் உண்மைக்கும் பொய்மைக்கும் சமரசம் செய்து வைக்க முனைவர். எதற்கும் எதற்கும் சமரசம் செய்வது என்று விவஸ்தையே கிடையாதா? பொய்மைக்கு எதிராகவும், உண்மைக்காகவும் போராடுபவர்கள் பிற்போக்குவாதிகளா என்ன? இக்கால கட்டத்தில் உண்மைக்காக குரல் கொடுப்பவர்களை பயங்கர வாதிகள் என அழைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இத்தகைய பச்சோந்தித்தனம் மிக்க "முற்போக்குவாதிகள்" மதமாற்றத்திற்கு, அநியாயங்களுக்கு உறுதுணையாக நிற்கிறார்கள்.

நன்றி: விஜயபாரதம்

தொடரும்.....

---

## வாசகர்களின் கேள்விக்கு பதில்கள்

ஒரு வாசகரின் கேள்வி? *நீங்கள் இந்துவே! என விழித்துக் கூறுகின்றீர்கள். இந்து சமயத்தின் உட்பிரிவுகளான சைவம் - சிவன், வைணவம் - விஷ்ணு, சாக்தம் - சக்தி, கௌமாரம் - முருகன், சௌரம் - சூரியன், காணபத்தியம் - கணபதி இவைகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையவைகளாக இருப்பினும் சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சைவம் மட்டுமே சிறந்ததென வாதிடுபவர்களுக்கு உங்கள் விளக்கம் என்ன?*

*வாசகர்களே இந்த வாசகரின் நியாய பூர்வமான சந்தேகத்திற்கு வாசகர்களான நீங்களே விளக்கம் அளியுங்கள். இதற்கான விளக்கத்தினை எமக்கு எழுதி அனுப்பினால் பொருத்தமானவற்றை எதிர்வரும் இதழ்களில் பிரசுரிப்போம்.*

---

## பொகவந்தலாவையில் "இந்துவே உன்னை அறிந்து கொள்" அறிமுகவிழா

"இந்துவே உன்னை அறிந்துகொள்" மாதாந்த சஞ்சிகையின் அறிமுகவிழா கடந்த 5.8.2000 அன்று காலை ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி கோயில் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

ஆலய பரிபாலன சபையும், ஸ்ரீ கதிரேசன் இந்து மாமன்றமும் இணைந்து ஏற்பாடு செய்த இந்த விழாவில் பிரதேச மக்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பெருந் தொகையானோர் கலந்து கொண்டனர். கொழும்பு விஷ்வ ஹிந்து பரிஷத்தினரும் பங்கு கொண்டு சிறப்பித்தனர்.

ஆலய பிரதம குரு வணக்கத்திற்குரிய ஸ்ரீ அ. பாலசுந்தர சர்மா அவர்களால் ஆலயத்தில் விஷேட பூஜைகளும் நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதர இந்துவே ! சதியை உணர்ந்து கொள் !

- ★ இந்துக்களின் ஜனத்தொகை மத மாற்றத்தாலும், குடும்பக் கட்டுப்பாட்டாலும் மிக வேகமாகச் சரிந்து வருகிறது.
- ★ இந்து உணர்ச்சிகள், புண்படுத்தப்படுகின்றன.
- ★ எம்மதமும் சம்மதம் என்ற கோஷத்தினால், இருக்கின்ற இந்துணர்வும் மழுங்கடிக்கப்படுகின்றன.
- ★ இஸ்லாமியர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் பரிந்து பேச, வாதாட, போராட அனைவரும் ஓடுகிறார்கள் ! ஆனால் இந்துவுக்கோ நாதியில்லை.

எனவே,

- ★★ இந்து தர்மத்தைப் பாதுகாத்து, இந்து சமுதாயத்தைப் பலவீனப்படுத்தும் அனைத்து சூழ்ச்சிகளையும் முறியடிக்க,
- ★★ இந்து சமுதாயத்தின் மீது நடத்தப்படும் பல்வேறு தாக்குதல்களைத் தகர்த்தெறிய,
- ★★ தீண்டாமையை ஒழித்து, ஜாதி மோதல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க,
- ★★ இந்து மதத்தினைக் குறைகூறி மதம் மாற்றும் மோசடியை வேரறுக்க,
- ★★ தன்மானமும், தன்னம்பிக்கையும், இறைபக்தியும் செயலாற்றுவதில் வீரமும், ஒற்றுமையும், கட்டுப்பாடும் வாய்ந்த இந்து சக்தியை உருவாக்க,

**இந்துவே! உன்னை அறிந்துகொள்** *ஒரு வித்தியாசமான பத்திரிகை*

- ★ இந்து இல்லங்களில் இறையுணர்வையும், சமய, ஆன்மீக விழிப்புணர்வையும் உருவாக்கவும்,
- ★ இந்து தர்மத்தின் சிறப்பியல்புகளைச் சாதாரண மக்களுக்கும் புரியும் வகையில் எளிமையாக எடுத்துரைக்கவும்,
- ★ இந்துக்களின் இன்றைய சாதனைகள் - எதிர்கொள்ளும் சோதனைகளை - ஆதாரத்துடன் செய்தித் தொகுப்பாகவும்,
- ★ இந்து சங்கங்கள் அனைத்துடனும் பொது நோக்கில் இணைந்து செயற்படவும்,
- ★ இந்து சங்கங்கள் இல்லாத ஊர்களில் இந்து ஒற்றுமைச் சங்கம் உருவாக்கவும்,

அழையுங்கள் – இணைகின்றோம்! வாருங்கள் – வரவேற்கின்றோம்!!

*இன்றே நீங்களும் சந்தாதாரர் ஆகுவீர் !*

*தனிப்பிரதி - 5/-, ஆண்டுச் சந்தா (தபாலில்) - 80/-*
*மாதம் பத்துப் பிரதிகள் ஆண்டுச் சந்தா (தபாலில்) - 600/-*
பணமாகவும் செலுத்தலாம். அல்லது
காசோலை **Kalaakenthram A/C No. 12045011 - H. N. B. Sea Street,**
என்ற பெயருக்கு எழுத வேண்டும்.
காசுக்கட்டளையை "Pettah" தபால் நிலையத்துக்கு பெறவேண்டும்.

*அனுப்பவேண்டிய முகவரி :*

**KALAAKENTHRAM**

**UNIE ARTS (PVT) LTD**
**48B, Bloemendhal Road,**
**Colombo 13.**

**NANDAS**
**236, Sea Street,**
**Colombo 11.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரத் தொடர்கதை – 6

# சுவாமி ஐயப்பன்



அரண்மனையைச் சென்றடைந்த அரசன் மணிகண்டனைத் தனது ராணியிடம் ஒப்படைத்து தனது சொந்த மகனைப் போல வளர்த்து வரலானான். மணிகண்டனின் கருணையாலும் பரமேசுவரனின் அருளாலும் இரண்டு வருடங்கள் கழித்து அரசனுக்கு ஒரு மகன் பிறந்தான். அந்தக் குழந்[illegible] ராஜராஜன் என்று [illegible] வைத்தார்கள். ராஜராஜனும் மணிகண்டனும் சூரியசந்திரர்களைப் போல அரண்மனையில் வளர்ந்து வந்தார்கள். அரண்மனையில் மகிழ்ச்சி பெருக்கெடுத்தோடியது. அந்நாட்டு மக்கள் ஆனந்தம் கொண்டனர். நாட்டின் செல்வம் பெருகியது.

மணிகண்டன் கல்வி கற்க வேண்டிய பிராயத்தை எய்தியதும் பந்தள மன்னன் அவனை குருகுலத்தில் சேர்த்தான். மணிகண்டன் எல்லாக் கலைகளிலும் நிகரற்று விளங்கினான். பிறப்பிலேயே ஊமையும் குருடனுமாக இருந்த குருவின் மகனுக்கு மணிகண்டன் பார்வையும் பேசும் ஆற்றலையும் அளித்தான். இதனால் மணிகண்டன் சாட்சாத் தர்மசாஸ்தா என்பதை குருநாதர் புரிந்து கொண்டார். ஆனால் இந்த அதிசயங்களை ரகசியமாகவே வைத்திருக்கும்படி மணிகண்டன் குருநாதரைக் கேட்டுக் கொண்டான். குருநாதர் மணிகண்டனை நன்றியுடன் வணங்கினார்.



நன்றி — என். ஐயப்பன் நாயர், குருவாயூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org